**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மானாமதுரை**
**ஓ.எஸ்.26/2020**
**2026 – ம் ஆண்டு ஜுன் மாதம் 18 – ம் நாள் வியாழக் கிழமை**
**வாதி – பிரதிவாதிகளின் சாட்சியின் வாக்குமூலம். 1869 ம் ஆண்டு சட்ட எண். 44 வது பிரிவு 6 (1) ன் படி கிரேடு III பெஞ்ச் கிளார்க் திரு.பி.இளங்கோவன் என்பவரால் உறுதிப்பிரமாணம் செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | **மேநாட்டான்** | **சாதி** | : | |
| **த/பெ** | : | | **சமயம்** | : | |
| **கிராமம்** | : | | **தொழில்** | : | |
| **வட்டம்** | : | | **வயது** | : | |

**வா.சா. 1 ஆஜர்.**
**( இடைநிலை மனு எண் 6/2026 அனுமதிக்கப்பட்டு வா.சா.ஆ 5 ஆவணம் குறியீடு செய்யப்பட்டது )**
**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த வழக்கின் வாதி தரப்பில் 1 வது சாட்சியாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். என் தரப்பில் பிரமாண நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்களை படித்துப் பார்த்து கையொப்பம் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எனக்குத் தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். எனது தரப்பில் ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. 21.02.2020 ம் தேதியிட்ட தாவா சொத்துக்கள் உள்ளிட்ட மொத்த சொத்திற்குரிய செட்டில்மெண்ட் நிலப்பதிவேடு ( SLR ) உண்மை நகல் வா.சா.ஆ 1

2. 30.09.1991 ம் தேதியிட்ட 4 ம் வாதி தாவா 3,4 லக்க சொத்துக்களை சுப்பிரமணியன் த/பெ சுப்பராயன் என்பவரிடம் கிரயம் பெற்ற பதிவு செய்யப்பட்ட கிரய ஆவணம் அசல் வா.சா.ஆ 2

3. 03.04.1998 ம் தேதியிட்ட 3 ம் வாதி 3 ம் லக்க சொத்தை 4 ம் வாதியிடம் கிரயம் பெற்ற பதிவு செய்யப்பட்ட கிரய ஆவணம் அசல் வா.சா.ஆ 3

4. 07.11.2000 ம் தேதியிட்ட தாவா சொத்துக்களுக்கு வாதிகள் பெயரில் மானாமதுரை வட்டாட்சியர் பிறப்பித்த பட்டா மாறுதல் உத்தரவு அசல் வா.சா.ஆ 4

5. 13.08.2019 ம் தேதியிட்ட சிவகங்கை கோட்டாட்சியரின் ந.க.அ 3/647/2017 என்ற நடவடிக்கையில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு தகவல் அறியும் உரிமைச்சட்டத்தில் பெறப்பட்ட நகல் வா.சா.ஆ 5

6. 17.02.2005 ம் தேதியிட்ட தாவா 3 ம் லக்க சொத்திற்கு 3 ம் வாதி பெயரில் உள்ள கணினி பட்டா எண் 508 அசல் வா.சா.ஆ 6

7. 27.01.2020 ம் தேதியிட்ட வாதிகள் 5 ம் பிரதிவாதியான மானாமதுரை வட்டாட்சியருக்கு அனுப்பிய அறிவிப்பு பதிவு தபால் ரசீதுகளுடன் ( 9 ) அலுவலக நகல் வா.சா.ஆ 7

8. 28.01.2020 ம் தேதியிட்ட வாதிகள் 5 ம் பிரதிவாதியான மானாமதுரை வட்டாட்சியருக்கு அனுப்பிய அறிவிப்பினை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டைகள் ( 9 ) அசல் வா.சா.ஆ 8

9. 04.03.2020 ம் தேதியிட்ட தாவா சொத்துக்களுக்குரிய வழிகாட்டு பதிவேட்டின் மதிப்பு குறித்த சார்பதிவாளர் மானாமதுரையின்கடிதம் அசல் வா.சா.ஆ 9.

பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**( பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணைக்காக வழக்கு வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது )**

**–Sd –**

**Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct.**

**–Sd –**

**District Munsif,**
**Manamadurai.**